2016 ஆகஸ்ட் 1]

(இ) திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் இராஜகோபுரத்தில் ஏற்பட்டுள்ள விரிசல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நாடுகளிலிருந்து, பல மாநிலங்களிலிருந்து, பல மாவட்டங்களிலிருந்து ஆன்மிக மக்கள் பெரிதும் விரும்பி வருகின்ற திருக்கோயில் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில். மாதா மாதம் கிரிவலம் வரும் ஆன்மிக மக்கள், அண்ணாமலையாரை வணங்குவதற்காக இத்திருக்கோயிலுக்கு வருகிறார்கள். 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தத் திருக்கோயில் 9 கோபுரங்களைக் கொண்டது. கோபுரத்தின் உயரம் 217 அடி, அகலம் 95 அடி, நீளம் 135 அடி. விஜயநகரப் பேரரசிலே முதல் பேரரசராக இருந்த கிருஷ்ண தேவராயர் காலத்தில் 1512 ஆம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டு, செவப்பநாயக்கர் அரசராக இருந்தபோது 1590-லே, அதாவது கிட்டத்தட்ட 78 ஆண்டுகாலம் கட்டி முடிக்கப்பட்டது அந்தத் திருக்கோயில் கோபுரம். ஒரு மாதக் காலத்திற்கு முன்னால் அந்தக் கோபுரத்தின் உட்பகுதியிலே ஒரு விரிசல் ஏற்பட்டு, அங்கேயிருக்கிற சம்பந்தப்பட்ட நிருவாக அலுவலர் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார். ஆனால், அந்தக் கோபுரம் இந்த ஆண்டு குடமுழுக்கு எடுப்பதற்காக பல பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தகவல் கோரல் என்ற வகையில்தான் நான் உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். அதனால் நீங்கள் சுருக்கமாகச் சொல்லி, அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. எ.வ. வேலு: *கவனத்தை ஈர்த்துவிடுகிறேன். இந்த ஆண்டு அந்தக் கோயிலில் சில உபயதாரர்களின் உதவியுடன் திருப்பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதன்மூலமாகத்தான் அந்த விரிசல் தெரிந்திருக்கிறது. எனவே, அரசு மிக வேகமாக விரைந்து, அந்தக் கோபுரத்தினுடைய விரிசலை, அதை அடைப்பதன் மூலமாக அல்லது மாற்றுவதன் மூலமாகத்தான் ஆன்மிகப் பெருமக்கள் நிம்மதியடைய முடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, தகவல் கோரல்போதும் உட்காருங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாம் என் மக்களுக்கே' என்று அல்லும் பகலும் மக்கள் நலன் காக்கும் மாதரசி, மனிதப் புனிதம், மக்கள் தெய்வம் எங்கள் அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) விவர அறிக்கையை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் வாயிலாக இம்மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் புகழ் பெற்ற அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 27-6-2002 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் குடமுழுக்கு விழா நடைபெற்று 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலையில், குடமுழுக்கு செய்திட வேண்டி திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், கிழக்கு இராஜகோபுரத்தின் நுழைவு வாயில் பகுதியில் கல்காரத்தை சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளும்போது, கல் உத்தரத்தில் விரிசல் கண்டுபிடிக்கப்பட்டு, தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு கேட்கப்பட்டு, இவ்விரிசல் சீரமைக்கக்கூடிய விரிசல்தான் என அறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT) உதவிப் பேராசிரியர் டாக்டர் அருள்மேனன் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்தவுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, உடனடியாக 23–7–2016 அன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரில் சென்று, திருக்கோயிலைப் பார்வையிட்டு, சீரமைப்புப் பணிகளை விரைந்து மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–10

மேலும் ஐ.ஐ.டி. உதவிப் பேராசிரியர், டாக்டர் அருள்மேனன் அவர்கள், கடந்த 27–7–2016 திருக்கோயிலுக்கு வருகைபுரிந்து, ஆய்வு மேற்கொண்டு இராஜகோபுர விரிசல் தொடர்பான அறிக்கையைச்

சமர்ப்பித்துள்ளார். இவரது அறிக்கையில், கல் உத்திரத்தில் ஏற்பட்டுள்ள இந்த சிறு விரிசல் புதிய விரிசல் இல்லையென்றும், சில ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டுள்ளது என்றும், இதனால், இராஜகோபுரத்திற்கு எந்த பாதிப்பும் தற்போது இல்லையென்றும் தெரிவித்துள்ளார். மேலும், கல் உத்திரத்தின்கீழ் இரும்புக் குழாய் மற்றும் angle–*மூலம் முட்டுக் கொடுத்து, தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, திருப்பணிப் பணிகளைத் தொடரலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், விரிசல் பாதிப்பை* stainless steel *கம்பி கொண்டு பாதிப்பு பகுதிகளைத் தைத்து, அதாவது,* stone stitching with steel anchors *மூலம் சரிசெய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் அனுபவம்பெற்ற நிறுவனங்கள் மும்பை மற்றும் புதுடில்லி ஆகிய நகரங்களில் மட்டுமே செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார். இந்தச் சீரமைப்புப் பணிக்கான மதிப்பீடு குறித்து மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து விவரங்களைப்பெற்று, உடனடியாக சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2016–2017, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of clause 3 of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the financial year 2016–2017."